THIRU T. MARTIN : There are certain departments whose Heads require extensive technical knowledge. For proper functioning of such departments, viz., Electricity Board, will the Government come forward to appoint such personnel who have extensive technical experience to man the same?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதிலே டெக்னிகல் அறிவை மாத்திரம் பார்க்க முடியாது. நிர்வாகத் திறனும் முக்கியம்.

Liquor Permits

* 188 Q.—THIRU A. M. RAJA :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether liquor permits have been granted to any of the I.C.S., I.A.S. and I.P.S. Officers in our State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, பணக்காரர்கள் லைசென்ஸ் பெற்று மது அருந்துகிறார்கள். ஆனால் அதேபோல் ஏழைகள் லைசென்ஸ் பெறமுடிவதில்லை. சட்டத்தின் மூலம் மது அருந்தக்கூடாது என்று சொல்வதால் செலவும் அதிகம் ஆகிறது, அரசாங்கத்திற்கு வருமானமும் குறைகிறது. எனவே இந்த மதுவிலக்கை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பர்மிட் கொடுப்பது பற்றியது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாக் காலம் ஆனதினாலே பர்மிட்டுக்கு மனு செய்துள்ளவர்களில் யாராவது 'வித்டிரா' செய்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய யோசனையைக் கேட்டு அவர்களே கொஞ்ச காலம் பின்வாங்கிக் கொள்வார்களானால் நலமாக இருக்கும்.

Eradication of Leprosy

* 189 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Union Government have consulted the State Government on the launching of a crash programme to eradicate Leprosy in Madras;

(b) if so, the details thereof; and

(c) the amount likely to be got from the Centre?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.